## வறுமையின் வடுக்கள்

நனவுகளில்  வயிறு;
ஏங்கி நர்த்தனமாட,
கனவுகளில் பசியாறி காட்சி முடியும்!

உதடுகள் உலர்ந்து,
கண்ணீர்த்துளியின்;
ஈரத்துக்கு கவனமாய்த்
தவமிருக்கும்!

கண்ணில் வழியும் கண்ணீர்;
கரை தாண்டாது,
உள்ளுக்குள்ளே,

நெஞ்சக் குழியுள் நிறைந்து;
பசிக்கின்ற வயிறை,
பாங்காய் நிரப்பும்!

கொஞ்சும் கால்களோ  தள்ளாடும்!
நெஞ்சமட்டும் நேராய் நிமிர்ந்திடும்!

மானங்காக்கும் ஆடை;
மனசாட்சியின்றி,
கிழிசலாய்;
வெட்கமின்றி பல்லிளிக்கும்!

இருட்டில்,
வழி நெடுக;
இயலாமை கால்தடுக்க,
குருடனுக்குக் கைத்தடியாய்,
நம்பிக்கை ஒன்றே;

வெளிச்ச விடியலுக்காய்,
விடியும் வரைக் காத்திருந்து;
ஒளியதுவும் வந்தபின்னே,
வசதி போர்த்த பின்னும்;

ஒளிந்து கொண்ட,
வறுமையின் வடுக்கள்;
சட்டைகளின் பொத்தான்களாக,

நினைவுகளை மூடியிருக்கும்!
நெஞ்சத்தில், நீங்காது குடியிருக்கும்!

க.இரவிக்குமார் 06-06-2021

(கடற்கரை கவியரங்கு-602)

## என்ன செய்வேன்?

மறுப்போரையெலாம் வெறுப்பேனா!
வெறுப்போரையெலாம் பொறுப்பேனா!
மறப்போரையெலாம் நினைப்பேனா!
அறமற்று மறப்பேனா நினைப்போரை;
திறமற்ற செய்கைதனை செய்வேனா?
பொறுப்பற்று தினந்தினம் தொடர்வேனா!
வரமாய் வாழ்க்கையைத் தெளிவேனா?
உரமாய் நம்பிக்கையை விதைப்பேனா?
மரமாய் செய்வதறியாது நிற்பேனா!
நேர்மையிலாது பொறுப்பைத் துறப்பேனா!
வரதா வரமுடன் வழிதனிலே வருவாயா?
வரந்தா என விழிமூடி காத்திருக்கவா!

## வேண்டாம்!

கிழப்பருவம் ஏந்தி கிடக்கவும் வேண்டாம்!
நோயில் வீழ்ந்து பாயிலே படுக்க வேண்டாம்!
பட்டினத்து ஆசான் பாடிப் பகன்றது போல்,
இன்னொரு பிறவி இனியும் வேண்டாம்!
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண வேண்டாம்!
நெடுமாலே நினதுருவை நேர்தலும் வேண்டாம்!
புழுவாய்ப் பிறந்து புண்ணியனை நினைக்க வேண்டாம்!
மழு ஏந்திய உன் மேனி கண்டு மயங்கவும் வேண்டாம்!
தொழுவார்க்கு இரங்குபவர் நீங்களென்றால்,
மண்ணில் வந்து நான் மறுபடி பிறக்க வேண்டாம்!

## எல்லாம் கடந்து போகும்!

நிலவின் ஒளி கூட நெருப்பாய்த் தகிக்கிது!
பகலவனின் ஒளியும் பக்கத்தில் வர தவிக்கிது!
கனவில் சுகங்கூட காணாமல் தொலையுது,
நனவில் நகைப்பும்கூட நாணாமல் தேயுது!
மறக்க வேண்டியதை மனது தானாய் நினைக்குது!
நினைக்க வேண்டியதை ஏனோ மறக்குது!
கண்ணீரும் பன்னீராக காலம் காத்துக் கிடக்குது!
எல்லாம் கடந்து போகுமிங்கே உண்மைதான்;
விரைந்து கடக்காது நாட்கள் நடந்தன்றோ,
மெல்ல ஆமையென  நாளுமிங்கே நகருது!

## அலைகள் கவலைகள் 12-05-2021

கடல் ஓர் ஆசான்,
காலையில் உதயம், மாலையில் அந்திமம்;
வாழ்க்கைத் தத்துவத்தின் வலைகளை விரிக்கும்!
நீரெலாம் ஆவியாக வான்மழை பொழியும்!
எத்தனை உயிர்கள் எத்தனை விதங்கள்!
கரையில் வராது கண்ணில் தெரியாது!
பிறந்து மடியும் பிடிபட்டவையோ மனிதனின்;
உணவாகி பசியைத் தான் நீக்கும்!
வாழ்க்கையெனும் கடற்கரை மணலில் நிற்கிறேன்!
கடல்நீரும் உப்பே! கண்ணீரும் உப்பே!
அலை அலையாய் கவலைகள் நாளும்,
அடுத்தடுத்து வர தடுத்திடாது புதைப்பேன்!
சோகங்களில் சில கடந்து போகும்!
கப்பல்களைப் போல் பெரிதானவையும்;
கடுகாகித்தான் மறைந்து போகும்!
தூரத்திலிருந்து, கடுகு பெரிதாகி;
கப்பலாய்க் கரையில் வந்து நிற்கும்!
அலைகள் தவிர்க்க முடியாதவை!
அண்ணாந்துவானத்தை இரசிக்கிறேன்;
வெட்ட வெளியைப் போல மனமும்,
கவலைகள் குவிந்தாலும் விசாலமாகி விரிகிறது!
அலைகள் கரையைத் தொடுவதும்
பின்னோக்கி ஓடுவதும் இயற்கையின் இயல்பே!
கண்ணை மூட காற்றும் வீச
கவலைகள் அதில் கரைந்தே போயின!

## வினை தீர்ப்பாயோ

வெண் மதியைத்
தலையில் வைத்து,
கண் மத்தியில்,
கனலாய்த் தெறித்து
நுண் விதியை,
நொடியில் தீர்க்கும்;
விண்ணவர் அதிபதி,
வேதத்தின் தலைவனே!

என் பதியாம்,
ஆடலில் வல்லோனே!

தன் மதியிழந்து;
தணலில் தவிக்கிறேனே!

மண் மீதினில்,
விழலாய் வீழுமுன்னே;
மனம் வைத்து,
வினை தீர்ப்பாய் ஏகம்பனே!

## விதி ! 08-12-2021

பதை பதைக்கும் செயலைச் செய்பவன்;
பல்லக்கிலே தினம் பவனி வருவான்!
நீதியின் வழி செல்பவனோ இங்கே;
நிதியின்றி ,நாதியற்று உறைவான்!

விதியென்று அதற்குப் பெயரை வைப்பீர்!
முன்வினை தீவினையென முகவுரை கொடுப்பீர்!
முற்பிறப்பை அறிந்தோரும் இல்லை!
பிற்பிறப்பைத் தெரிந்தோரும் இல்லை!

விதிக்கென கதைகள் இங்கே பலவுண்டு!
துதி செய்யக் காவியங்கள் துணையுண்டு!
வல்லவனிங்கே வாழ்கின்றான்!
வலிமை இழந்தவனோ வாழ வழியின்றி,
வலியுடனே தாழ்கின்றான்!

நாளை விடியுமென ,
நம்பிக்கையாய் உறங்கச் செல்வோம்!
காலை எழுந்தவுடன் ,
கடவுளுக்கா நன்றி சொல்வோம்!
விதையை ,
வாழ்வுக்குப் போட்டதென்னவோஅவன்தான்!

விதியென்று அவனெதுவும் விதைப்பதில்லை!
வினைகள் மட்டுமே விதியென முகமூடியாகும்!
மதியொன்றையே இங்கே ,
துணை கொண்டு ;கதியென்று ,
பின் தொடர்ந்தால்,
சதி செய்யும் விதியின் பெயரை,
சகதியாக்கி சாக்கடையில்
சாகும்வரை அடைப்போம்!
சாட்சியின்றிப் புதைப்போம்!

## அன்னையர் தினமாமே 09-05-2021

அன்னையர் தினமாமே! அடடா!!
அகிலத்தில் யாரோ சொன்னார்!

தன்னுயிரினில் சிலகாலம்;
என்னுயிரினை சுமந்து நின்றாள்!
தன்னலமின்றி அவள் தரணியிலே,
எம்நலத்துக்கென, என்றும் வாழ்ந்தாள்!

விண்ணகத்தே அவள் பறந்தாலும்;
மண்ணகத்தே நான் வாழும்வரை,
என்னகத்தே நினைவு உள்ளவரை;
எல்லா நாளும் அவள் நாளே!

## ஏ மனமே! 21-12-2021

உற்றதை உயர்வாய் ,உள்ளே உணர்ந்து;
பெற்றதைப் பெரும் பேராய் அறிந்து,
பெறுவதைப் பெறும் வரை ,
பொருமலின்றிப்
பொறுமையாய் இருப்பாயா?

பொறாமை கொள்ளாது,
இதயத்தில் கனலின்றி ;
உதயத்து பகலனவாய்ப்
பதமாய் உணர்வாயா?

கண்டதையும் பண்ணிவிட்டு,
கொண்டதை எண்ணிக் குழம்பாது;
சண்டித்தனம் முந்திச் செய்யாது,
பண்டிதனாய்ப் பலம் பெற விழைவாயா?

வந்ததை எண்ணி நொந்து கொள்ளாது;
நிந்தனையின்றி நிம்மதி கொள்வாயா?

நினைந்து ,
அதில் நிதம் நனைந்து வருந்தாது;
வருவதையெலாம்,
வருகிற தையிலிருந்தாவது ;
வரமாய் அதை நினைப்பாயா!
உரமாய் விதைப்பாயா? —0—

## தமிழின் புகழ் வளர்ப்பேன் !

நூல் கண்டு ,நுண்புலம்அறியாது ,
சிறுநூற்கண்டாய் உருண்டு நிற்போர்;
தான் அறியாத்தமிழைத் தகைவின்றி,
நோய்கொண்டு வாடும்நோயாளியென;
செல்லாத செல்லரித்த குறிக்கோளால்,
கல்லெறிவார் !பொல்லாத கயவரெலாம்,
புல்லரவர் புனிதம் அறிவாரோ?

இல்லாத பொருளில்லா, 14-04-2021
எல்லையில்லாஎம்தமிழைச்
சொன்னாலும்அறிவாரோ ?
தொல்லைதனை தொடுப்பாரோ?
கல்கொண்டு அவரைத் தாக்காது,
கற்கண்டுநனிமொழிசீர்கொண்டு,
சீற்றமறச்செறிந்தசொற்கொண்டு,
பதர்களை வென்று எழுந்திடாது;
புதைகுழியிலவர்எண்ணந் தள்ளிப்,
புல் வளர்ப்பேனே !தமிழின் நற்
புகழ் நிதம் வளர்ப்பேனே! - இரவிக்குமார்

## பாதை 2021-11-17

கடந்து வந்த பாதை கண்ணில் நிழலாய் ஆடுது!
கண்ணீர்த் திவலைகளால் ஈரம் காயவில்லை!
கவலைப் படுவதால் ஒரு போதுமது உலரப்போவதில்லை!
குதூகலங்களும் அங்கங்கே கொட்டிக் கிடந்தது!

நினைவில் வரும் போதெல்லாம் பொம்மலாட்டம் ஆடுது!
பாடமாய்ப் படித்துப் பார்க்க அடடா அடடா!
அத்தனையும் முத்தான எழுத்துக்களில்,
சரியான பதில்களுக்கு மதிப்பெண் தந்தால்;
தேர்வாகி அடுத்த வகுப்பு செல்லும் !ஆனால்,
அடித்தல் திருத்தல்களின்றி எத்தனைத் தவறுகள்!

பாடங்கள் அதில் கற்க பல்லாயிரம் எனினும்,
கடந்து போன காலத்தால் படித்துப் பார்க்க மட்டுமே!
(read only)
எஞ்சிய பாதை மட்டுமே நிசமென காத்துக் கிடக்க ,
கால் தடங்களை ஒழுங்காய் பதித்து நடக்க,
விரைந்து சரியாய்ச் செல்லுமோ அதில் காலம்!
—0—

## 24-10-2021

அகம் கண்டே வாடகைக்கு வந்தேன்!
பழகி நானும், சொந்தமாக்கிக் கொண்டேன்!
நீ தந்த மகிழ்வான தருணமுண்டு!
நொந்து வெந்த தினங்கள் கண்டதுண்டு!
காயங்கள் இரணங்களானதுண்டு!

மாயமாயும் மனதினில் மறைந்ததுண்டு!
நேயமாய் நினைத்துப் பார்க்கிறேன்!
வாய்மையாய் சொல்லப்போனால்,
கொண்டாடவும் இதை முடியவில்லை!
கோபமாயும் பிரியவில்லை!

அகத்தில் நெருக்கடி என்பது,
முகத்தில் கொசுக்கடியாய் தினம்;
அனுமனின் வால் போல் நீள்கிறது!
அனுமானிக்க முடியாது மனந்துவள்கிறது!
எதுவும் மறக்கவில்லை! இன்றும்,

உன்னை முழுதும் துறக்கவில்லை!
பிரிவென்பதே மீண்டும் சேரத்தானே!
பரிவுடனே சொல்கிறேன் நானே,
வருவேன் ஒருநாள் மீண்டும் தானே!
காத்திரு அதுவரை என் !**சொந்த வீடே**

==0==

## மூளையே உனக்கு விண்ணப்பம் 2021-03-24

மூளையே
நேற்று நடந்ததை மறக்க வைக்கிறாய்!
என்றோ நடந்ததை நினைக்க வைக்கிறாய்!
புரியாத புதிராக அன்றோ நீயும்,
பூமியில் என்னோடு வாழ்கிறாய்!

பள்ளியின் முதல் நாள்;
புத்தாடை வண்ணம் நினைவிலில்லை!
கல்லூரியின் முதல் நாள் ;
கால் சட்டை கைச் சட்டை இரண்டுமே நினைவில்!
வேலைக்குச் சென்ற முதல் நாள்,
ஆடைகளின் வண்ணங்கள் நினைவிலில்லை!

முதல் சம்பள நாள் நினைவிலில்லை!
முதல் கடன் இன்று வரை மறக்கவில்லை!
திருமணத்தில் மனைவியின் ,
முகூர்த்தப் புடவை நிறம் நினைவில்!
முதலிரவில் புடவையின் நிறம் நினைவில்லை!

மகளின் முதல் பிறந்த நாள்,
ஆடையின் வண்ணம் நினைவில்!
இரண்டாம் பிறந்த நாள் ,
வண்ணம் நினைவிலில்லை!

கணித ஆசிரியர் அறைந்த ஒரே அறையும்,
மகளுக்குக் கொடுத்த ஒரே அடியும் ,நினைவில்!
இளம்வயதில் எத்தனை அடிகள்!
அத்தனையும் நினைவிலில்லை!

அம்மிக் குழவியை மடியில் வைத்து,
ஆசனத்தில் நின்ற அரை மணிநேர;
அப்பாவின் தண்டனை நினைவில்!
மரணத்துக்குப் பின் சுடுகாடுவரை ,
தாயின் முகம் நினைவில் தொலைந்து போனது!
மரணப்படுக்கையில் ,
முதுகைச் சொறியச் சொன்னாள் அம்மா!
சொறிந்து முடித்தபோது ,
மலர்ந்த அவள்முகத்தை ;
முன்பு அது போல் பார்த்ததில்லை!
அந்த நினைவை மூளை இன்று வரை
அழிக்கவில்லை!

நான் கட்டளையிடாமலே,
அன்றாட நிகழ்வுகளைத்;
தானியங்கியாய்,
அழித்து அழித்து சுமையைக் குறைக்கிறாய்!

அழுத்தமான நினைவுகளை ,
என் அனுமதியின்றியே பதித்து வைக்கிறாய்!
மூளையின் நினைவுகள் ஓர் அதிசயம்!
புண்களை அது புதைத்து வைத்திருக்கிறது!
தோண்டி எடுத்து தொட்டாலே வலிக்கிறது!
மகிழ்வுகளை மறைத்து வைத்திருக்கிறது!
தொட்டாலே அது மலர்கிறது!

எது எப்படியோ !உன்னிடம் ஓர் விண்ணப்பம்!
துன்பம் விளைத்தோரை,
நினைவில் இருந்தே நீக்கு!
சிறு உதவியானாலும் செய்தோரை ,
என் உயிருள்ளவரை ஞாபகப்படுத்து!

—0—

## எல்லாம் கடந்து போகும் 08-07-2021

நிலவின் ஒளி கூட நெருப்பாய்த் தகிக்கிது!
பகலவனின் ஒளியும் பக்கத்தில் வர தவிக்கிது!
கனவில் சுகங்கூட காணாமல் தொலையுது!
நனவில் நகைப்பும்கூட நாணாமல் தேயுது!
மறக்க வேண்டியதை மனது தானாய் நினைக்குது!
நினைக்க வேண்டியதை ஏனோ மறக்குது!
கண்ணீரும் பன்னீராக காலம் காத்துக் கிடக்குது!
எல்லாம் கடந்து போகுமிங்கே உண்மைதான்,
விரைந்து கடக்காது நாட்கள்;
நடந்தன்றோ மெல்ல ஆமையென நகருது!
பொல்லாத பூமியென புரியிது!

—0—

## என்ன செய்வேன்? 22-07-2021

மறுப்போரையெலாம் வெறுப்பேனா?
வெறுப்போரையெலாம் பொறுப்பேனா?
மறப்போரையெலாம் நினைப்பேனா!
அறமற்று மறப்பேனா! நினைப்போரை,
திறமற்ற செய்கைதனை செய்வேனா?
பொறுப்பற்று தினந்தினம் தொடர்வேனா!
வரமாய் வாழ்க்கையைத் தெளிவேனா!
உரமாய் நம்பிக்கையை விதைப்பேனா!
மரமாய் செய்வதறியாது நிற்பேனா!
நேர்மையிலாது பொறுப்பைத் துறப்பேனா!
வரதா வரமுடன் வழிதனிலே வருவாயா?
வரந்தா என விழிமூடி காத்திருக்கவா?

—0—

## தொலைந்து போனவள்! 16-04-2021

அவளா இவள்?
முத்துக் கோத்ததென முன்வரிசை!
முல்லைச் சரச் சிரிப்பதிலே,
நித்தம் தவமிருந்து நானும்;
பித்தம் பிடித்தவனாவேன்!

அவள் கன்னக்குழியில் என்,
எண்ணங்கள் புதைத்து நிற்பேன்!
கத்திக் கனலாய் கோபத்தில்,
அவள் தெறித்தால்;
மெத்த அவள் கண்ணீரில்,
மொத்தமாய் கரைந்திடுவேன்!

வரைந்திடாத அவள் புருவங்கள்;
வானவில்லை நினைவு படுத்தும்!
கலைந்திடாது சீர்செய்த,
கருங்கூந்தல் கால்வரை நீளும்!
நடையில் கூட நளினமிருக்கும்!
சடையங்கே ஜதிகள் போடும்!
அவளா இவள்?

உறையிலே வாளிருந்தால்,
பிறர்உயிர் குடித்தல் ஆதலில்லை!
உறவிலே வாளாயிருந்து,
உயிர் எடுத்து போனதெப்படி?
நனவில் நாளெல்லாம் நின்றவள்;
கனவில் கூட காணாது,
தொலைந்து போனவள்!
கண்ணிதிரே கடந்து போனாள்!
அவளா இவள்?

கோத்த முத்தின் முன்வரிசையில்,
பார்த்தவரை இரண்டில்லை!
வனப்பின்றி புருவம் வரைந்தும்,
வானவில் வனவாசம் போனதோ!
கார்மேகக் கூந்தல் காலாவதியாகி,
தார் பூசி போலியாய்ச் சிரித்தது!
அவளா இவள்?
கன்னக் குழிகளுக்குப் போட்டியென,
சின்னக் குழந்தை கசக்கிய காகிதமென,
எண்ணி விடக்கூடிய எழிலில்லா
சுருக்கங்கள்!
எண்ணங்கள் திரும்பிப் பார்க்க;
அட அவளா இவள்?

தொலைந்து போனவள்!

நடை தடுமாற, ஜதிகள் நாட்டியம் மறந்தது!
உறவெனும் உறை விட்டு,
உறைவாளை எடுத்தும்;
என்உயிர்போகவில்லை!
அவளா இவள்?

நடந்து அவள் போகையிலே,
கண்பார்வை வீசிப்போனாள்!
கடந்தபோன கால ஓட்டத்தில்,
கலைந்து போன; காலாவதியான,
என் வதனம் கண்டு,
எள்ளி நகையாடியதோ?
அவள் உள்ளம் இரங்கி வாடியதோ!
அவளோ இவள்!
அவளல்லவே இவள்!

—0—

## வேண்டாம்! 15-07-2021

கிழப்பருவம் ஏந்தி கிடக்கவும் வேண்டாம்!
நோயில் வீழ்ந்து பாயிலே படுக்க வேண்டாம்!
பட்டினத்து ஆசான் பாடிப் பகன்றது போல்,
இன்னொரு பிறவி இனியும் வேண்டாம்!
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண வேண்டாம்!
நெடுமாலே நினதுருவை நேர்தலும் வேண்டாம்!
புழுவாய்ப் பிறந்து புண்ணியனை நினைக்க வேண்டாம்!
மழு ஏந்திய உன் மேனி கண்டு மயங்கவும் வேண்டாம்!
தொழுவார்க்கு இரங்குபவர் நீங்களென்றால்,
மண்ணில் வந்து நான் மறுபடி பிறக்க வேண்டாம்!

—0—